بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 4, April 2014 (Tamil)**

## இறையன்பை, இறை நெருக்கத்தைப் பெறுவதற்கு இமாம் மஹ்தி (அலை) அவர்கள் வழங்கிய வழிகாட்டல்கள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

இன்று நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த அன்பு பற்றி சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன்; அவர்களின் வழிகாட்டல்களை எடுத்துக் கூறுவேன் . அவற்றில் அவர்கள் இறையன்பு என்பதன் உண்மை நிலையையும், இலக்கணத்தையும் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும் அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கான இரகசியத்தையும் வழிமுறையையும், அதன் ஆழமான கருத்தையும், தத்துவத்தையும் விளக்கிக் கூறியிருக்கிறார்கள். மேலும் அன்னார் மீது நம்பிக்கை கொண்டிருப்பவர்களாகிய நம்மிடம் - அன்னாரின் ஜமாஅத்தைச் சார்ந்தவர்களிடம் என்ன நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றியும், இறையன்பைப் பெறுவதற்கு நாம் என்ன முயற்சி செய்ய வேண்டும்? அதற்கு என்ன தகுதி இருக்க வேண்டும்? ஆகியவற்றைப் பற்றியெல்லாம் விளக்கமாகக் கூறியிருக்கிறார்கள். எனவே இந்த வகையில் எல்லா சான்றுகளும் சிந்திக்கத் தக்கவையாகும். அவை நமக்கு வழிகாட்டும் விளக்கு ஆகும். எனவே இறையன்பு என்ற கருத்தின் உயிர்நாடியைப் புரிந்து கொண்டவாறு அதில் முன்னேறக் கூடியவர்கள் ஆகுவதற்காகவும், அதை அதிகப்படுத்தக் கூடியவர்கள் ஆகுவதற்காகவும், நம்மை சீர்திருத்துவதற்காகவும் இவற்றை மிக கவனத்துடன் கேட்க வேண்டிய தேவை இருக்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

'' அன்பு என்பது எந்தவொரு செயற்கை மற்றும் பகட்டிற்கான செயல் அன்று. மாறாக, அது மனித ஆற்றல்களில் உள்ள ஓர் ஆற்றலாகும். மேலும் அதன் உண்மை நிலை என்னவென்றால், உள்ளம் ஒன்றன் மீது அன்பு கொண்டு அதன் பக்கம் ஈர்க்கப்படுவதாகும். ஒவ்வொன்றின் உண்மையான சிறப்புத்தன்மைகள் அதன் முழுமையான நேரத்தில் தெளிவான முறையில் வெளிப்படுகின்றன. இதுவே அன்பின் நிலையுமாகும். அன்பு என்ற அந்த இரத்தினமும் நிறைவான, முழுமையான படித்தரத்தை அடைந்து விடும்போது மிக பகிரங்கமாக வெளிப்படுகின்றன. இதைத்தான் இறைவன், **'அஷ்ரபூ ஃபீ குலூபிஹிமுல் இஜ்ல'** என்று கூறுகிறான். அதாவது அவர்கள் கன்றுக் குட்டியின் மீது எந்த அளவுக்கு நேசம் கொண்டனர் என்றால், அவர்களுக்கு கன்றுக் குட்டி, அருந்தும் பானம் போன்று அருந்தக் கொடுக்கப்பட்டது. உண்மையில் ஒருவர் ஒருவரை முழுமையாக நேசிக்கும் போது அவரை அருந்தி விடுகிறார்; அல்லது உட்கொண்டு விடுகிறார். அவருடைய நல்லொழுக்கம் மற்றும் நடைமுறையுடன் ஒன்றி விடுகிறார். **மேலும் எந்த அளவுக்கு அதிக அன்பு இருக்கிறதோ அதே அளவுக்கு மனிதன் இயல்பாகவே, தான் நேசிப்பவரின் பண்புகளின் பக்கம் ஈர்க்கப்படுகிறார்.** எதுவரையெனில், அவர் எவரை நேசிக்கின்றாரோ அவரது தோற்றமாகவே மாறி விடுகிறார். **எவர் இறைவனை நேசிக்கின்றாரோ, அவர் தனது தகுதிக்கேற்ப இறைவனிடம் இருக்கும் அந்த ஒளியை நிழலாகப் பெற்றுக் கொள்கிறார் என்பதுதான் இதிலுள்ள இரகசியமாகும்.** மேலும் ஷைத்தானை நேசிப்பவர்கள் ஷைத்தானிடம் இருக்கின்ற அந்த இருளைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆக, இதுவே அன்பின் இரகசியம் ஆகும். இறைஞானம் என்பதுடன் தொடர்பு படுத்தி இறைவனின் பண்புகளை மேற்கொள்வது பற்றி

கூறப்பட்டிருப்பதாவது, அனைத்து பண்புகளைப் பற்றிய அறிவு இல்லாத வரை இறைஞானம் கிடைக்க முடியாது. இறைஞான (ம் கிடைத்தத) த்திற்குப் பிறகு மனிதன் முன்னேறிச் செல்லும்போது (கிடைக்கும்) அதுவே இறையன்பாகும். அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொள்ளும்போதுதான் இறையன்பு முழுமையடைகிறது. ஞானத்தைப் பெறுவது மட்டும் அவசியமானதன்று. மாறாக, அதனை மேற்கொள்ளவும் வேண்டும். அல்லாஹ்வின் பண்பில் தோய்ந்தவராகிவிட வேண்டும். அதற்குப் பிறகு அல்லாஹ்வின் ஒளி கிடைக்கிறது.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

'' இறைவனுக்குக் கட்டுப்படுபவர்கள் உண்மையில் **மூன்று வகைப்படுவர். முதல் வகையினர்,** திரையிடப்பட்டிருப்பதன் காரணமாகவும், காரணிகளைக் காண்பதன் காரணமாகவும் இறையருளை நன்றாகக் காண்பதில்லை.''

அதாவது, அல்லாஹ் திரையில் இருக்கிறான். மனித வடிவில் தென்படுவதற்கு அவன் வெளிப்படையில் இல்லை. உலக காரணிகள் அவர்களுக்கு தென்படுகின்றன. அவற்றைப் பற்றிய அறிவும் அவர்களுக்கு இருக்கிறது. மனிதன் அவற்றை உணரவும் செய்கின்றான். உலக காரணிகள் முன்னால் தென்படும்போது, இந்தக் காரணிகளை படைத்தவனும் ஒருவன் இருக்கின்றான்; அவன் இறைவன் ஆவான் என்ற உணர்வு அவர்களுக்கு இருப்பதில்லை. எனவே இந்தப் பொருள்களை மனிதன் அதிகம் நேசிக்கத் துவங்கி விடுகிறான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

'' மேலும் இறையருளின் மகத்துவங்களைக் காண்பதன் மூலம் உருவாகின்ற அந்த உந்துதல் அவர்களிடம் உருவாவதில்லை.மேலும் பேரருள் புரிபவனின் மகத்தான அருள்களைப் பற்றி சிந்திப்பதன் மூலமாக தூண்டுதலைப் பெறுகின்ற அந்த அன்பு அவர்களிடம் இயங்குவதிலை. மாறாக, ஒரு மேலோட்டமான பார்வையின் மூலமாக படைப்பாளனின் உரிமைகள் ஆகியவற்றை ஒப்புக் கொள்கின்றனர்.''

அதாவது,அல்லாஹ்வின் பேரருளை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் ஒட்டுமொத்தமான முறையில் நாங்கள் முஸ்லிம்கள்; அல்லாஹ்வின் உரிமையை அல்லது படைப்பினங்களின் உரிமைகளை ஒப்புக் கொள்வதாக வாதிக்கின்றனர். எனவே அல்லாஹ் நம்மைப் படைத்தான் என ஒப்புக்கொள்கின்றனர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

''மேலும் இறைவனின்பேரருளளைப் பற்றிய எத்தகைய விபரங்களை நுண்ணிய கண்ணோட்டத்துடன் பார்ப்பது அந்த உண்மையான பேரருளாளனை கண்களுக்கு முன்னால் கொண்டு வருகிறதோ அதை ஒருபோதும் அவர்கள் பார்ப்பதில்லை.''

அதாவது, நாங்கள் இறைவனை நம்புகிறோம்; இறைவனை நேசிக்கிறோம் என பொதுவாகக் கூறிவிடுகின்றனர். ஆனால் அவர்கள் பயன்பெறும் ஒவ்வொருவரும் பயன்பெறும்போது அல்லாஹ்வின் பேரருளை முன்னால் கொண்டுவருவதில்லை. மாறாக, உலக பயன்களை, உலக காரணிகளை முன்னால் வைக்கின்றனர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

'' ஏனெனில், காரணம் என்னவென்றால், காரணிகளை வணக்கும் அவர்களின் தூசுகளும் கறைகளும் உண்மையான காரணகர்த்தாவின் முழு முகத்தை பார்ப்பதை விட்டும் தடுத்து விடுகிறது. எனவே உண்மையான அருளாளனின் அழகை முழுமையான முறையில் காணும் அளவிலான தூய்மையான பார்வை அவர்களுக்கு கிடைப்பதில்லை. எனவே அவர்களின் குறைபாடுள்ள இறைஞானம் காரணிகளைத் தேடும் கறையினால் கலந்ததாக இருக்கிறது. மேலும் அவர்கள் இறைவனுடைய பேரருள்களை நன்றாக பார்க்க முடியாததன் காரணமாக எந்த பேரருள்களின் மூலமாக பேரருளாளனின் தோற்றம் பார்வைக்கு முன்னால் வந்து விடுகிறதோ அவற்றைக் காணும் நேரத்தில் கவனிக்க வேண்டியவற்றை அவர்களும் கவனிப்பதில்லை. மறாக, அவர்களின் இறைஞானம் மங்கலான ஒன்றாக இருக்கிறது. அதற்குக் காரணம், அவர்கள் கொஞ்சம் தங்களின் முயற்சிகள், காரணிகள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். மேலும்

படைக்கும் பண்பு, வாழ்வாதாரத்தை வழங்கும் பண்பு ஆகிய இறைவனின் சில பண்புகள் (அவன்) நம் மீது (செய்ய வேண்டிய) கடமையாக இருக்கின்றன. ஆனால் இறைவன் மனிதனுக்கு அவனது அறிவாற்றலை விட அதிகமாக துன்பம் தர விரும்புவதில்லை. எனவே அவர்கள் அந்த நிலைமையில் இருக்கும் வரை அவனது உரிமைகளுக்கு (அவர்களின் தகுதிக்கேற்ப) நன்றி செலுத்த வேண்டும் என்றே விரும்புகின்றான். மேலும் **'இன்னல்லாஹ யஃமுருக்கும் பில் அத்ல்'** (அவன் உங்களுக்கு நீதியை நிலைநாட்டுமாறு கட்டளை இடுகின்றான்) என்பதில் உள்ள **அத்ல்** என்பதன் கருத்து, நீதியை கவனத்தில் கொண்டவாறு செய்யும் இந்த கட்டுப்படுதல்தான் (என்றெல்லாம் அவர்கள் நம்புகின்றனர்).''

அதாவது, அல்லாஹ் அவர்களின் புரியும் தன்மைக்கேற்ப அவர்கள் எவ்வளவு நன்றி செலுத்தினாலும் அதனையே போதுமானதாகக் கொள்வதுதான் அல்லாஹ் நீதியை நிலைநாட்டுதல் என்பதாகும் எனக் கருதுகின்றனர்.

**இரண்டாவது வகையினரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

''ஆனால் இதை விட மேலாக இறைஞானத்திற்கு இன்னொரு படித்தரம் இருக்கிறது. அது நாம் இப்போது கூறியது போன்று, மனிதனின் பார்வை காரணிகளை விட்டும் முற்றிலும் தூய்மையடைந்து, பரிசுத்தமாகி இறைவனின் பேரருள் செய்யும் கைகளைக் கண்டு கொள்கிறது. மேலும் இந்த படித்தரத்தில் மனிதன் காரணிகள் எனும் திரைகளை விட்டும் முற்றிலும் வெளியே வந்து விடுகிறான். உதாரணமாக, எனது நீர்ப்பாய்ச்சுதலின் காரணமாக என் வயலில் விளைச்சல் ஏற்பட்டது; அல்லது எனது சக்தியினாலேயே எனக்கு இந்த வெற்றி கிடைத்தது;அல்லது ஸைது என்பவரின் கருணையினால் இன்ன காரியம் நிறைவேறியது; அல்லது பக்ர் என்பவர் கவனித்ததால் நான் நாசத்திலிருந்து தப்பித்துக் கொண்டேன் ஆகிய இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் அவருக்கு வீணானதாகவும் அபத்தமானதாகவும் தெரிய ஆரம்பித்து விடுகிறது. மேலும் ஒரே இருப்பு, ஒரே ஆற்றல், ஒரே பேரருளாளன், ஒரே கை அவருக்குத் தென்படுகிறது. அப்போது மனிதன் காரணிகளை ஷிர்க்காக்குதல் எனும் தூசுவோ கறையோ ஓர் அணு அளவு கூட இல்லாத தூய ஒரு பார்வையால் இறைவனின் பேரருள்களைக் காண்கின்றான். மேலும் இந்த காணுதல் எப்படிப்பட்ட தெளிவானதாவும், உறுதியானதாகவும் இருக்கிறதென்றால், அவர் அப்படிப்பட்ட பேரருளைக் கொண்ட இறைவனை வணங்கும்போது அவனை மறைவானவனாகக் கருதுவதில்லை; மாறாக, நிச்சயம்மாக அவனை முன்னால் உள்ளவனாகக் கருதி அவனை வணங்குகிறார். அந்த இறைவணக்கத்திற்குத்தான் திருக்குர்ஆனில் **'இஹ்ஸான்'** என்று பெயர். சஹீஹ் புகாரியிலும், சஹீஹ் முஸ்லிமிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் **'இஹ்ஸான்'** என்பதற்கு இந்தப் பொருளைத்தான் கொடுத்திருக்கிறார்கள்.''

**மூன்றாவது வகையினரைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

''இந்த படித்தரத்திற்குப் பிறகு இன்னொரு படித்தரம் இருக்கிறது. அதற்கு **'ஈதாயிஸில் குர்பா'** என்று பெயர். அதன் விளக்கம் என்னவெனில், மனிதன் ஒரு காலம் வரை காரணிகளின்றி இறையருள்களைக் கண்டுகொண்டிருக்கும்போது - அவனை முன்னாலும் சுயமாக அருள்பாலிப்பவனாகக் கருதி அவனை வணங்கிக் கொண்டிருக்கும்போது அந்த எண்ணத்தின், சிந்தனையின் கடைசிவிளைவு, அவருக்கு இறைவனைப் பற்றி ஒரு சொந்த அன்பு உருவாகி விடும். ஏனெனில் தொடர்ந்து பேரருள்களை தேவையின்போது நிரந்தமாகக் காண்பது பேரருள் செய்யப்பட்டவரின் உள்ளத்தில் எப்படிப்பட்ட தாக்குதலை உருவாக்குகிறது என்றால், எவனுடைய எல்லையற்ற பேரருள்கள் அவரை சூழ்ந்து விட்டதோ அவர் படிப்படியாக அவனுடைய சொந்த அன்பினால் நிரம்பி விடுகிறார். எனவே இப்படிப்பட்ட நிலையில் அவர் பேரருள்களைப் பற்றிய சிந்தனைகளினால் மட்டும் அவனை வணங்குவதில்லை. மாறாக ஒரு குழந்தைக்கு தன் தாயுடன் ஒரு சொந்த அன்பு இருப்பது போன்று, அவனைப் பற்றிய சொந்த அன்பு அவருடைய உள்ளத்தில் இடம்பிடித்து விடுகிறது. எனவே இந்த படித்தரத்தில் அவர் இறைவணக்கத்தின்போது இறைவனை மட்டும் பார்ப்பதில்லை. மாறாக, உண்மையான காதலர்களைப் போன்று இன்பத்தையும் பெறுகிறார். மேலும் மனத்தின் எல்லா நோக்கங்களும் இல்லாமறபோய் உண்மையான அன்பு அவரிடம் உருவாகி விடுகிறது. இந்த படித்தரத்தைத்தான் இறைவன் **'ஈதாயிஸில் குர்பா'** என விளக்கியிருக்கிறான். அதன் விளக்கம் என்னவெனில், மனிதன் ஒரு காலம் வரை காரணிகளின்றி

மேலும் இதைத்தான், '**ஃபஸ்குருல்லாஹ கஸிக்ரி ஆபாயிக்கும் அவ் அஷத்த ஸிக்ரா**' (உங்களுடைய மூதாதையர்களை நினைவு கூறியது போன்று அல்லாஹ்வை நினைவு கூறுங்கள் அல்லது அதை விட அதிகமாக) என்ற வசனத்தில் இறைவன் சுட்டிக்காட்டியிருக்கிறான். சுருக்கமாக, '**இன்னல்லாஹ யஃமுருக்கும் பில் அத்லி வல் இஹ்ஸான். வயீதாயிஸில் குர்பா**' (அல்லாஹ் உங்களுக்கு நீதியுடனும், பேருபகாரத்துடனும் நடந்து கொள்ளுமாறும், உறவினர்களுக்குக் கொடுப்பது போன்று கொடுக்குமாறும் கட்டளையிடுகின்றான்) என்ற வசனத்தின் விளக்கம் இதுவாகும். இதில் இறைவன், மனிதனிதனிடம் காணப்படும் மூன்று படித்தரத்தைக் கொண்ட இறைஞானங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளான். மேலும் மூன்றாவது படித்தரத்தை சொந்த அன்பு என்ற படித்தரமாக குறிப்பிட்டுள்ளான். மேலும் இந்த படித்தரத்தில் எல்லா மனித நோக்கங்களும் எரிந்து விடுகின்றன. மேலும் ஒரு குப்பி நறுமணத்தால் நிரம்பி இருப்பது போன்று உள்ளம் அன்பால் நிரம்பி விடுகிறது. இந்த படித்தரத்தையே, '**வமினன்னாஸி மன்ய் யஷ்ரீ நஃப்ஸஹுப்திகாஅ மர்ழாத்தில்லாஹி வல்லாஹு ரவூஃபுன்ம் பில் இபாது**' எனக் கூறுகிறான். அதாவது நம்பிக்கை கொண்டவர்களில் சிலர், தமது உயிர்களை அல்லாஹ்வின் திருப்திக்காக விற்று விடுகின்றனர். மேலும் அப்படிப்பட்டவர்கள் மீதே அல்லாஹ் கருணை காட்டுகின்றான். மேலும் இன்னொரு வசனத்தில், '**பலா மன் அஸ்லம வஜ்ஹஹூ லில்லாஹி வஹுவ முஹ்ஸினுன் ஃபலஹூ அஜ்ருஹூ இந்த ரப்பிஹீ. வலா கவ்ஃபுன் அலைஹிம் வலாஹும் யஹ்ஸனூன்**' எனக் கூறுகிறான். அதாவது எவர்கள் தம்மை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட்டார்களோ, அவனுடைய பேரருள்களை நினைத்து அவனைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களைப் போன்று அவனை வணங்குகிறார்களோ அப்படிப்பட்டவர்கள் அவனிடமிருந்து நற்கூலியைப் பெறுகின்றனர். மேலும் அவர்களுக்கு எவ்வித அச்சமும் இருக்காது; அவர்கள் துயரப்படவும் மாட்டர்கள். அதாவது அவர்களின் குறிக்கோள் இறைவனாகவும், இறையன்பாகவும் இருக்கிறது. இறைவனிடமிருந்துள்ள அருள்கள் அவர்களின் கூலியாக இருக்கிறது.''

## அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிமுறை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

'' எதன் மூலமாக, எதன்படி செயல்படுவதன் மூலமாக இந்த உலகத்திலேயே இறைவனைப் பார்க்க முடியும் என்ற போதனையை திருக்குர்ஆன் எடுத்து வைக்கிறது. உதாரணமாக,'**மன் கான யர்ஜூ லிகாஅ ரப்பிஹீ ஃபல்யஃமல் அமலன் சாலிஹன். வலா யுஷ்ரிக் பியிபாதத்தி ரப்பிஹீ அஹதா**' அதாவது, உண்மையான இறைவனும், அன்பு செலுத்துபவனுமாகிய அந்த இறைவனை இந்த உலகத்திலேயே காணும் நற்பேறு கிடைக்க வேண்டும் என விரும்புபவர்கள் எந்தவிதமான குழப்பமும் இல்லாத நற்செயலைச் செய்ய வேண்டும். அதாவது **அவரது செயல் மற்றவர்களுக்கு காட்டுவதற்காக இருக்கக் கூடாது. அதன் மூலமாக நான் அப்படிப்பட்டவன்; இப்படிப்பட்டவன் என அவரது உள்ளத்தில் ஆணவமும் ஏற்பட்டு விடக் கூடாது**. அந்த செயல் குறைபாடுள்ளதாகவோ முழுமையடையாததாகவோ இருக்கக் கூடாது. **அதில் உண்மையான் அன்பிற்கு மாற்றமான எந்தவிதமான நாற்றமும் இருக்கக் கூடாது**. மாறாக, உண்மை மற்றும் நன்றியுணர்வினால் நிரம்பி காணப்பட வேண்டும். அத்துடன் எல்லாவிதமான ஷிர்க்கிலிருந்தும் அது விலகியிருக்க வேண்டும். சூரியனோ, சந்திரனோ, வானத்தின் நட்சத்திரங்களோ, காற்றோ, நெருப்போ, தண்ணீரோ, பூமியிலுள்ள வேறு எந்த பொருளோ வணக்கத்திற்குரியதாக ஆக்கப்படக் கூடாது. மேலும் உலக காரணிகளுக்கு - அவை இறைவனுக்கு நிகரானவை என்ற அளவுக்கு கண்ணியமளிக்கக் கூடாது. அவற்றின் மீது அந்த அளவுக்கு நம்பிக்கை வைக்கக் கூடாது. மேலும் **தனது தைரியத்தையும், முயற்சியையும் ஒரு பொருட்டாக மதிக்கக் கூடாது**. இதுவும் ஷிர்கின் வகைகளில் ஒரு வகையாகும். மாறாக, எல்லாவற்றையும் செய்து விட்ட பிறகு நாம் ஒன்றும் செய்யவில்லை எனக் கருத வேண்டும். தனது அறிவின் மீது ஆணவம் கொள்ளக் கூடாது. தனது செயலின் மீது பெருமை கொள்ளக் கூடாது. மாறாக தன்னை உண்மையில் ஒரு அறிவிலியாகக் கருத வேண்டும். ஒன்றுமற்றவராகக் கருத வேண்டும். ஆன்மா எந்நேரமும் இறைவனின் மடியில் வீழ்ந்திருக்க வேண்டும். துஆக்களின் மூலமாக அவனுடைய அருளை தன் பக்கம் ஈர்க்க வேண்டும். மிகவும் தாகித்தவரைப் போன்று ஆகிவிட வேண்டும். அவர் தாகித்தவராக இருந்தும் ஆதரவற்றவராக இருக்கிறார்; அவருக்கு முன்னால் மிகவும் தூய இன்பமான ஒரு நீரூற்று தென்படுகிறது. அவர் துன்பப்பட்டவாறும் துயரப்பட்டவாறும் சென்று எந்நிலையிலும் தன்னை அந்த நீரூற்று வரை கொண்டு சென்று விடுகிறார். தனது உதடுகளை அந்த நீரூற்றில் வைத்து விடுகிறார். வயிறார குடிக்கும் வரை அதிலிருந்து விலகவில்லை. இப்படிப்பட்டவரைப் போன்று அவர் ஆகி விட வேண்டும்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

'' நம்பிக்கையாளரின் தன்மை காதலரின் தன்மையைப் போன்று இருக்கிறது. அவர் தனது காதலில் உண்மையாளராக இருக்கிறார். அவர் தான் காதலிக்கும் இறைவனுக்காக முழுமையான, தூய்மையான, அன்பான, உயிரை மாய்த்துக் கொள்கின்ற ஓர் உந்துதலை தன்னுடன் கொண்டிருக்கிறார். அவர் மன்றாடியவாறும், மனஉருக்கத்துடனும் உறுதியாக நிலைநிற்றலுடனும் அவன் முன்னிலையில் நிலைபெற்றிருக்கிறார். உலகத்தின் எந்த இன்பமும் அவருக்கு இன்பமாக இருப்பதில்லை. அவருடைய ஆன்மா அந்த அன்பிலேயே வளர்கிறது. அன்பாளன் சார்பாக பொருட்படுத்தாத தன்மையைக் கண்டு அவர் அஞ்சுவதில்லை. அவன் மவுனமாகவும், கவனம் கொள்ளாதவனாகவும் இருப்பதைக் கண்டு அவர் ஒருபோதும் தைரியம் இழந்துவிடுவதில்லை. மாறாக, எப்போதும் முன்னாலேயே காலெடுத்து வைக்கின்றார். மேலும் மன வேதனையை அதிகமதிகமாக உருவாக்கிக் கொண்டே செல்கின்றார். இவை இரண்டும் இருப்பது அவசியமானதாகும். அதாவது நம்பிக்கை கொண்ட இறையன்பு செலுத்துபவர் இறையன்பில் மூழ்கியிருக்க வேண்டும். மேலும் இறைவன் மீதுள்ள அன்பு முழுமையானதாக இருக்க வேண்டும். அவரை எந்தவொரு துக்கமும் அசைக்க முடியாத அளவுக்கு அன்பில் உண்மையான உத்வேகமும், அன்பின் உறுதிமொழியில் உறுதியாக நிலைபெற்றிருத்தல் என்பது நிரம்பி காணப்பட வேண்டும்.அன்பிற்குரியவனின் சார்பாக அவ்வப்போது பொருட்படுத்தாத தன்மையும், மவுனமும் இருக்கலாம். இரு வகையான வேதனை காணப்பட வேண்டும். ஒன்று அல்லாஹ்வுடைய அன்பின் வேதனை; இரண்டாவது ஒருவருடைய துன்பத்தின்போது உள்ளத்தில் வேதனை எழ வேண்டும். அவருக்காக நல்லதை நாடியவாறு துடிப்பு ஏற்பட வேண்டும். அவருக்கு உதவி செய்வதற்காக நிம்மதியற்ற ஒரு நிலை அவரிடம் உருவாக வேண்டும். இறையன்பிற்காக எத்தகைய தூய தன்மை மற்றும் வேதனை இருக்கிறதோ அத்துடன் உறுதியாக நிலைபெற்றிருத்தலும் இணைந்துள்ளதோ அது மனிதன் என்ற வட்டத்தை விட்டும் அப்புறப்படுத்தி இறைமை என்ற நிழலின் கீழ் மனிதனை கொண்டு வந்து விடுகிறது. இந்த அளவு வரை வேதனையும் இறைவன் மீதுள்ள அன்பும் சென்றடையாதவரை - அல்லாஹ் அல்லாதவற்றில் மூழ்கியிருப்பதிலிருந்து விலகாதவரை மனிதன் அபாயங்களில் வீழ்ந்து கிடக்கின்றான். மனிதன் அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து முற்றிலும் விலகி அவனுக்காகவே ஆகி விடாதவரை இந்த அபாயங்களை அழிப்பது கடினமாகி விடுகிறது. இறைவனது திருப்தியில் நுழைவதும் சாத்தியமில்லாததாகி விடுகிறது. மிகவும் கருணையுள்ள தாய் தனது சக்தியற்ற அன்புக் குழந்தைக்காக உள்ளத்தில் உண்மையான அன்பு கொண்டிருப்பது போன்று அவர் படைப்பினங்களுக்காக வேதனையைக் கொண்டிருக்க வேண்டும்.''

அதாவது அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து முற்றிலும் விலகியிருக்கின்ற அதே நேரத்தில் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்காக உள்ளத்தில் வேதனையயும் கொண்டிருக்க வேண்டும். இதுதான் ஒரு சரியான நம்பிக்கையாளரின் உள்ளத்தில் இருக்கும் உண்மைநிலையாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

''எந்த அளவுக்கு அல்லாஹ்வின் இருப்பின் மீதும் அவனது மகத்துவத்தின் மீதும் நம்பிக்கை இருக்குமோ அந்த அளவுக்கு அல்லாஹ்வைப் பற்றிய அன்பும், அச்சமும் இருக்கும். இல்லையென்றால் கவனமற்ற நாட்களில் குற்றங்கள் செய்வதில் தைரியமானவராகி விடுவார். **அல்லாஹ்விடம் இருக்கும் அன்பு, அவனது மகத்துவம், அவனது ஆதிக்கம் பற்றிய அச்ச உணர்வு ஆகியவற்றின் மூலமாகத்தான் பாவங்கள் அழிகின்றன.** மனிதனுக்கு எந்த விஷயங்களைப் பற்றிய அறிவு இருக்கிறதோ அவற்றைப் பற்றித்தான் அவன் அஞ்சுகிறான் என்பது பொது விதியாகும். உதாரணமாக, நெருப்பு எரித்து விடுகிறது என்பதை அவன் அறிந்திருக்கிறான். எனவே அவன் நெருப்பில் கையை இடுவதில்லை. அல்லது உதாரணமாக, இன்ன இடத்தில் பாம்பு இருக்கிறது என அவனுக்குத் தெரிந்தால் அந்த வழியில் அவன் கடந்து செல்ல மாட்டான். அவ்வாறே பாவம் எனும் விஷம் அவனை அழித்து விடும் என்ற உறுதியான நம்பிக்கை அவனுக்கு இருக்குமென்றால் அவன் அல்லாஹ்வின் மகத்துவத்திற்கு அஞ்சுவான். இறைவன் பாவத்தை வெறுக்கின்றான்; பாவத்திற்கு கடும் தண்டனை தருகின்றான் என்ற உறுதியான நம்பிக்கை அவனுக்கு இருக்குமென்றால் அவனுக்கு பாவம் செய்வதற்கான தைரியமோ, வீரமோ வராது. பின்னர் அவர் பூமியில் இறந்தவர் செல்வது போன்று செல்வார். அவருடைய ஆன்மா எப்போதும் இறைவனிடம் இருக்கிறது. **மனிதன் அல்லாஹ்வின் அன்பு எனும் நெருப்பில் வீழ்ந்து தன்னை முற்றிலும் மாய்த்து விடும்போது அன்பு எனும் அந்த மரணமே அவருக்கு ஒரு புதிய வாழ்வை வழங்குகிறது.அன்பும் ஒரு நெருப்புதான்; பாவமும் ஒரு நெருப்புதான் என்பதை உங்களால் புரிய முடியாதா என்ன? எனவே இறையன்பு என்ற இந்த நெருப்பும் பாவம் எனும் நெருப்பை எரித்து விடுகிறது. இதுவே ஈடேற்றத்தின் ஆணிவேராகும்.''**

பிறகு இறை நெருக்கத்தை நாம் நமது உள்ளங்களில் உருவாக்குவதற்காக எந்த வகையில் அவர்கள் நமக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள் என்பதற்கு ஓர் உதாரணத்தை நான் எடுத்துக் கூறுகிறேன். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவுரை கூறுகிறார்கள் :**

'' தனக்கு ஓர் இறைவன் இருக்கிறான்; அவன் எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்கவனாவான் என்பதை அறியாத மனிதன் எவ்வளவு இழப்பிற்குரியவனாக இருகிறான்? நமது சுவர்க்கம் நமது இறைவன் ஆவான். நமது உயர்ந்த இன்பங்கள் நமது இறைவனிடம் இருக்கின்றன. ஏனெனில் நாம் அவனைக் கண்டிருக்கிறோம். மேலும் எல்லா அழகையும் அவனிடத்தில் பெற்றோம். உயிரைக் கொடுப்பதால் கிடைக்குமென்றாலும் இந்த செல்வம் பெறத்தகுந்ததாகும். எல்லாவற்றையும் இழப்பதனால் கிடைக்குமென்றாலும் இந்த மாணிக்கம் பெறத்தக்கதாகும். **இழப்பிற்குரியவர்களே! நீங்கள் அந்த நீரூற்றின் பக்கம் ஓடிச் செல்லுங்கள். அது உங்கள் தாகத்தைத் தணிக்கும். அது வாழ்விற்கான நீரூற்றாகும். அது உங்களை வளம் பெறச் செய்யும். நான் என்ன செய்வேன்? எவ்வாறு இந்த நற்செய்தியை உள்ளங்களில் பதிய வைப்பேன்? உங்களுக்கென்று ஓர் இறைவன் இருக்கின்றான் என மக்கள் கேட்கும் பொருட்டு எந்த முரசு கொண்டு நான் கடைவீதிகளில் அறிவிப்பேன்? கேட்பதற்காக மக்களின் காதுகள் திறப்பதற்கு எந்த மருந்தைக் கொண்டு நான் மருத்துவம் செய்வேன்?** நீங்கள் இறைவனுக்காக ஆகி விட்டால் அவன் உங்களுக்காக ஆகி விடுவான் என்பதை உறுதியாக புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பீர்கள்; அவன் உங்களுக்காக விழித்திருப்பான். நீங்கள் எதிரிகளிடமிருந்து கவனமற்றவர்களாக இருப்பீர்கள்; இறைவன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பான். மேலும் அவர்களிம் சதித்திட்டங்களை முறியடிப்பான். உங்களின் இறைவனிடம் என்னென்ன வல்லமைகள் இருக்கின்றன என்பதை நீங்கள் இன்னும் அறிய மாட்டீர்கள். நீங்கள் அறிந்திருந்தால், உலகத்திற்காக கடுமையாக கவலைப்படக்கூடிய எந்தவொரு நாளும் உங்களுக்கு வராது. தன்னிடம் ஒரு கருவூலத்தைக் கொண்டிருக்கின்ற ஒருவர் ஒரு பைசா வீணாகி விட்டதால் அழுகின்றாரா? புலம்புகின்றரா? நாசமாக நினைக்கின்றாரா? பிறகு உங்களுக்கு அந்த கருவூலத்தைப்பற்றிய ஞானம் இருக்குமென்றால் - இறைவன் ஒவ்வொரு தேவையின்போதும் உதவி செய்யக் கூடியவனாவான் என்ற ஞானம் இருக்குமென்றால் நீங்கள் உலகத்திற்காக ஏன் உங்களை மாய்த்துக் கொள்கிறீர்கள்? **இறைவன் ஓர் அன்பான கருவூலமாவான். அவனுக்கு மதிப்பளியுங்கள். அவன் ஒவ்வோர் அடியிலும் உங்களுக்கு உதவி செய்வான்.** அவன் இல்லாமல் நீங்கள் ஒன்றுமே அல்ல. உங்களின் முயற்சிகளும் திட்டங்களும் ஒன்றுமே அல்ல. காரணிகளில் முற்றிலும் வீழ்ந்து விட்ட பிற சமுதாயங்களைப் பின்பற்றாதீர்கள். பாம்பு மண்ணைத் தின்பதைப் போன்று அவர்கள் தாழ்ந்தவையான காரணிகள் எனும் மண்ணைத் தின்று விட்டனர். கழுகும் நாயும் இறந்தவற்றை உண்பதைப் போன்று அவர்களும் இறந்தவற்றின் மீது வாய் வைத்துள்ளனர். அவர்கள் இறைவனை விட்டும் வெகு தூரம் விலகிச் சென்று விட்டனர். அவர்கள் மனிதர்களை வணங்கினர். பன்றியை தின்றனர். மதுவை தண்ணீரைப் போன்று பயன்படுத்தினர். அவர்கள் அளவுக்கு அதிகமாக காரணிகளின் மீது வீழ்ந்ததனால், இறைவனிடம் ஆற்றலை வேண்டாததனால் அவர்கள் மரணித்து விட்டனர். ஒரு கூட்டிலிருந்து புறா பறந்து சென்று விடுவதைப் போன்று அவர்களிடமிருந்து வானத்தின் ஆன்மா வெளியேறி விட்டது. அவர்களிடம் உலகத்தை வணங்குதல் என்ற தொழு நோய் இருக்கிறது. அது அவர்களின் எல்லா உட்புறமான உறுப்புகளையும் வெட்டி விட்டது. எனவே நீங்கள் அந்த தொழு நோயிற்கு அஞ்சுங்கள்.''

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :**

''நீங்கள் இறைவனைப் புரிந்து கொள்வதற்காக அதிகமாக முயற்சி செய்யுங்கள். அவனைப் பெறுவது முற்றிலும் ஈடேற்றமாகும். அவனை அடைவது முற்றிலும் அடைக்கலமாகும். எவர் உண்மையான உள்ளத்துடனும் நேசத்துடனும் அவனைத் தேடுகிறாரோ அவருக்கே அவன் தோற்றமளிக்கிறான். அவனுக்காகவே ஆகிவிடுபவருக்குத்தான் அவன் தன் தோற்றத்தை வெளிப்படுத்துகிறான். தூய உள்ளங்கள் அவனுடைய அரியணையாகும். பொய், ஏசிப்பேசுதல், புறம்பேசுதல் ஆகியவற்றிலுருந்து தூய்மையாகவும், பரிசுத்தமாகவும் இருக்கும் நாவுகளே அவனுடைய வஹீக்கான இடமாகும். அவனது திருப்தியில் மாய்த்துக் கொள்கின்ற ஒவ்வொருவரும் அவனது அற்புத ஆற்றலின் தோற்றமாக மாறி விடுகிறார்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த தகுதியில் நம்மை இருப்பதைப் பார்க்க விரும்பினார்களோ அந்த தகுதிகளைப் பெறும் நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக. நாம் தூய மனதுடன் அல்லாஹ்வின் பக்கம் குனிபவர்களாகவும், அவனை நேசிப்பவர்களாகவும், அவனது நேசத்தைப் பெற்று அதை நமது வாழ்வின் அங்கமாக மாற்றுபவர்களாகவும் அவனது திருப்தி எனும் சுவர்க்கத்தில் நுழைபவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

by: **Nazarat Nashr-o-Isha'at Qadian** Translated By: ***O.M.Muzzammil Ahmad***